தினமணி

# பருவநிலை மாற்றத்தால்நெல் பயிரைத் தாக்கும் நோய்கள்

First Published : 19 May 2011 01:54:43 AM IST



நெல் வயல். இலை உறை அழுகல் நோய்.

புதுச்சேரி, மே 18: பருவநிலை மாற்றத்தால் வெப்பம் அதிகரித்துள்ளது. காற்றில் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. வளி மண்டலத்தில் மாசு நிறைந்துள்ளது. இதனால் இப்போது கோடைக்காலத்தில் கூட மனிதர்களில் பலர் சளி தொல்லை, மூச்சு விடுவதில் பிரச்னைகளைச் சந்தித்து வருகின்றனர்.

மழைக் காலத்திலும் குளிர்காலத்திலும் நெற் பயிரைத் தாக்கும் நோய்கள் இப்போது கோடைக்காலத்திலும் தாக்குகின்றன. இதற்கும் அதேதான் காரணம்.

இப்போது பரவலாக சொர்ணாவாரி நெல் பட்டத்தில் ஆடுதுறை 37, டிகேஎம் 9 ஆகிய நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இப் பயிர்களைத் தாக்கும் நோய்கள் குறித்தும் அதைத் தடுக்கும் முறைகள் குறித்தும் புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் துறை நிபுணர் என். விஜயகுமார் கூறியது:

மார்கழி, தை மாதங்களில் குளிர் அதிகமாக இருக்கும்போது நோய் அதிகம் வரும். இந்த ஆண்டு வெப்பநிலை அதிகமாக இருக்கும்போதும் சொர்ணாவாரி பட்ட நெல் சாகுபடியில் நோய் தாக்குதல் இருக்கிறது.

கண்ணுக்குப் புலப்படாத நுண் கிருமியான ஒருவிதமான பாக்டீரியாவால் இப்போது நோய்கள் உருவாகி வருகின்றன. பொதுவாக இந்த பாக்டீரியா கிருமிகள் உஷ்ணம் அதிகமாக இருக்கும்போது அழிந்து விடும். ஆனால் இந்த ஆண்டு உஷ்ணம் அதிகமாக இருந்தாலும் காற்றில் ஈரப்பதத்தின் அளவு அதிகமாக இருப்பதாலும் வளி மண்டலத்தில் மாசுகள் அதிகமாக சூழ்ந்திருப்பதாலும் இத்தகைய நோய்கள் பயிரைத் தாக்கியுள்ளன. இதனால் மகசூல் இழப்பு ஏற்படும் நிலை உள்ளது.

இப்போது நெல் பயிரைத் தாக்கியுள்ள நோய்களும் தடுப்பு முறைகளும்:-

குலை நோய்: பொதுவாக இந்த நோய் டிசம்பர், ஜனவரி மாதங்களில் ஐ.ஆர். 50 நெல் ரகங்களில் அதிகமாக வரும். ஆனால் இப்போது வயலில் சாகுபடி செய்யப்பட்டுள்ள ஆடுதுறை 37 ரகத்தில் இதன் தாக்குதல் தென்படுகிறது.

குலை நோய் வருவதற்கான காரணம்: காற்றில் அதிகமான ஈரப்பதம் மற்றும் மண்ணில் உள்ள பயிர்களின் வேர்களால் சரியாக சுவாகிக்க முடியாமல் இருப்பதால் இந்த நோய் வருகிறது.

இதைக் கட்டுப்படுத்த வயல், வரப்புகளில் உள்ள களைகளை அப்புறப்படுத்த வேண்டும். தழைச்சத்து உரம் அதிகமாக இடக்கூடாது. அப்படி தழைச்சத்து உரம் அதிகமாகப் போடுவதாக இருந்தால அதை 3 பிரிவாகப் பிரித்து இட வேண்டும்.

அதாவது 50 சதவீதம் பயிர் நடவு செய்யும் போதும் 25 சதவீதம் தூர் கட்டும் போதும், மற்றொரு 25 சதவீதம் தண்டு உருளும்போதும் இட வேண்டும். தாக்குதல் அதிகமாகத் தென்பட்டால் 0.2 சதவீதம் சூடோமோனாஸ் புளோரன்ஸ் என்ற உயிரி ரக மருந்தை 1 கிலோ எடுத்து 500 லிட்டர் நீரில் கரைத்து நடவு நட்ட 45-வது நாளில் இருந்து 10 நாள் இடைவெளியில் 3 முறை பயிரின் மீது தெளிக்க வேண்டும். தாக்குதல் மிகவும் அதிகமாக இருந்தால் கார்பன்டசீல் 1 ஹெக்டேருக்கு 250 கிராம் அல்லது டிரைசெக்லோப்ஸ0ல் 250 கிராம் தெளிக்க வேண்டும்.

பாக்டீரியல் இலை கருகல் நோய்: இந்த நோய் இப்போது ஆடுதுறை 37 நெல் ரகத்தில் அதிகம் தென்படுகிறது. இது முக்கியமாக கோடைப்பருவத்தில் பய்டோபிளாஸ்மா, ஆர்என்ஏ வைரஸ் மூலம் வருகிறது.

நிர்வகிக்கும் முறைகள்: ஒரு வயலில் இருந்து மற்றொரு வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சக் கூடாது. 20 கிலோ பசும் சாணத்தை 100 லிட்டர் நீரில் 12 மணி நேரம் ஊற வைத்து அதன் நீரை இலைகள் மீது தெளிப்பதால் இதைக் கட்டுப்படுத்தலாம்.

பிளிச்சிங் பவுடர் 100 மைக்ரோ கிராம் 1 மி.லி. தண்ணீரில் கரைத்து பயிரில் தெளிக்க வேண்டும். தாக்குதல் அதிகமாகத் தென்பட்டால் காப்பர் ஹைட்ராக்ப்ஸடு 2000 ஒரு லிட்டர் தண்ணீரில் 2.5 கிராம் என்ற அளவில் கரைத்துத் தெளிக்க வேண்டும்.

இலைக் கருகல் நோய்: நெல்லில் தண்ணீர் அதிகமாகக் கட்டும்போது இலை கருகிவிடுகிறது. இதைச் சரி செய்ய தழைச் சத்து அதிகம் இடுவதைத் தவிர்த்து சாம்பல் சத்து அதிகம் இட வேண்டும். 2 சதவீதம் கால்சியம் சல்பேட் அல்லது 0.2 சதவீதம் சூடோமோனாஸ் புளோரஸல் என்ற உயிரி ரக மருந்தை இலையின் மீது தெளிக்க வேண்டும்.

அதிமாகத் தென்பட்டால் கார்பன்டஸீம் 1 லிட்டர் நீருக்கு 1 கிராம் அல்லது கான்டாப் 1 லிட்டர் 2 மி.மீ. அல்லது டெனோமைல் 1 லிட்டர் நீருக்கு 2 மி.லி. பாலிஆக்ஸின் 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் அல்லது காப்பர் ஹைட்ரைக்சைடு101 ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் எதாவது ஒன்றை கரைத்துத் தெளிக்க வேண்டும்.

இலை உறை அழுகல்நோய்: டிகேஎம் 9, என்ற நெல் ரகத்தில் பரவலாகத் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த வடிகால் வசதி அவசியம். நெல் பயிரில் தேங்கியுள்ள நீரை வடிகட்ட வேண்டும்.

தாக்குதல் அதிகமாகத் தென்பட்டால் காப்பர்ஹைராக்சைடு 101 ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம், அல்லது பென்டின் ஹைட்ராக்ப்ஸடு 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து இலை உறை மீது தெளிக்க வேண்டும்.

தாக்குதல் மிகவும் தென்பட்டால் புராபிகோனாப்ஸ0ல் 1 லிட்டர் நீருக்கு 1 கிராம் என்ற அளவில் எடுத்து தண்டுப் பகுதியில் சுற்றியுள்ள இலை உறை மீது தெளித்து நோயின் தாக்குதலைக் குறைக்கலாம். இது போன்ற ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகளால் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம்.

**கருகல் நோய் பாதிப்பால் சிறிய வெங்காய விலை வீழ்ச்சி**

First Published : 18 May 2011 10:35:41 AM IST

தேனி, மே 17:தேனி பகுதியில் சிறிய வெங்காயப் பயிரில் ஏற்பட்டுள்ள கருகல் நோய பாதிப்பால் விலை வீழ்ச்சி ஏற்பட்டு, விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

தேனி பகுதியில் ஸ்ரீரெங்கபுரம், அம்பாசமுத்திரம், வெங்கடாசலபுரம், கோவிந்தநகரம் உள்ளிட்ட பல கிராமங்களில் விவசாயிகள் சிறிய வெங்காயம் பயிர் செய்துள்ளனர்.

தற்போது வெங்காயம் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

கடுமையான வெயில் இருந்து வரும் நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன் இப்பகுதியில் லேசான மழை பெய்தது.இதனால் வெங்காயப் பயிர்களின் மேல் பகுதி கறுப்பு நிறமாக மாறி கருகல் நோய் ஏற்பட்டது.

சுமார் 60 ஏக்கரில் சிறிய வெங்காயத்தைப் பயிரிட்டிருந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.அறுவடை துவக்கத்தில் தேனி பகுதியில் 60 கிலோ எடையுள்ள 1 மூடை வெங்காயம் ரூ. 1,600 முதல் 1,700 வரை விற்பனையானது.

ஆனால் தற்போது வெங்காயத்தில் ஏற்பட்டுள்ள கருகல் நோயினால் 1 மூடை வெங்காயம் ரூ. 900-க்கும் குறைவாக விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் பலர் நஷ்டமடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: கூடுதல் லாபம் பெற வாய்ப்புள்ளதாகக் கருதி வெங்காயம் பயிரிட்டோம்.

ஆனால் தற்போது வெங்காயத்தில் ஏற்பட்டுள்ள கருகல் நோயினால் உற்பத்திச் செலவுக்கானப் பணம் கூட கிடைக்காத நிலை உள்ளது.

விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## 27-ல் விவசாயிகள் குறைகேட்பு

First Published : 18 May 2011 09:52:00 AM IST

கடலூர், மே 17: ஒவ்வொரு மாதமும் 3-வது வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம் இந்த மாதம் 27-ம் தேதி நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் அறிவித்தார்.

ஆட்சியர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

27-ம் தேதி காலை 10-30 மணிக்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம் நடைபெறும்.

கடலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது வேளாண் சார்ந்த குறைகளையும் கோரிக்கைகளையும் தெரிவிக்கக் கூட்டத்தில் அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். எழுத்துப் பூர்வமாகவும் கோரிக்கை மனுக்களை இக்கூட்டத்தில் வழங்கலாம். தெரிவிக்கப்படும் குறைகளுக்கு சம்மந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கைகள் எடுக்கவும் மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் செய்திக் குறிப்பில் மாவட்ட ஆட்சியர் கேட்டுகொண்டுள்ளார்.

சட்டப் பேரவைத் தேர்தல் காரணமாக, தேர்தல் ஆணையரின் உத்தரவின் பேரில் கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைக்கேட்கும் கூட்டம், கடந்த 2 மாதங்களாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

**விவசாயிகள் போராட்டத்தால் பாழாகும் பசுந்தேயிலை**

First Published : 18 May 2011 12:44:45 PM IST

மஞ்சூர், மே 17: மஞ்சூர் அருகே உள்ள கிண்ணக்கொரை கூட்டுறவுத் தேயிலை ஆலையில் பசுந்தேயிலைக்கு குறைந்த விலை நிர்ணயம் செய்ததால் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பசுந்தேயிலை பறிக்கப்படாமல் முற்றி பாழாகி வருகிறது.

கிண்ணக்கொரை பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தேயிலை விவ சாயம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பசுந்தேயிலை கிண்ண க்கொரை கூட்டுறவுத் தேயிலை ஆலை மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த ஆலையில் 800க்கும் அதிகமான சிறு, குறு விவசாயிகள் அங்கத்தினர்களாக சேர்ந்து பசுந்தேயிலை விநியோகம் செய்து வருகின்றனர்.

விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒருமுறை விலை நிர்ணயம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கடந்த ஏப்ரல் மாதம் விவசாயிகள் விநியோகம் செய்த பசுந்தே யிலைக்கு ரூ.7 என ஆலை நிர்வாக்த்தின் சார்பில் விலை நிர்ணயிக்கப்பட்டது. இது மற்ற கூட்டுறவு ஆலைகளை விட ரூ.1முதல்2வரை குறைவு என்பதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர். இதையடுத்து பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்க வேண் டும் என விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. விவசாயிகளின் கோரிக் கையை ஏற்க ஆலை நிர்வாகம் மறுத்துவிட்டது.

இதனால் கடந்த புதன்கிழமை முதல் கிண்ணக்கொரை கூட்டுறவுத் தேயிலை ஆலைக்கு பசுந்தேயிலை விநியோகம் செய்வதை விவசாயிகள் நிறுத்தியுள்ளனர். விவசாயிகளின் இந்த போராட்டத்தால், ஆலையில் தொடர்ந்து உற்பத்தி மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் விவசாயிகளுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடத்த கூட்டுறவு ஆலை நிர்வாகமோ, இன்ட்கோ சர்வ் நிர்வாகமோ நடவடிக்கை எடுக்காததால் போராட்டம் தொடர்கிறது.

பசுந்தேயிலை பறிக்காமல் தேயிலைச் செடிகளிலேயே முற்றி பாழாகி வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியில் இருக்கும் 500-க்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்ட விவசாயக் கூலித்தொழிலாளர்கள் வேலை இல்லாமல் தங்களின் அன்றாட தேவைக்கே அல்லல் படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் கிண்ணக்கொரை கூட்டுறவு ஆலை நிர்வாகத்திற்கு இழப்பு ஏற்படுவதுடன், ஆலை தொழிலாளர்களுக்கும் வேலை இல்லாத நிலை ஏற்படும். இதனால் விவசாயிகள் மட்டுமின்றி ஆலைத் தொழிலாளர்கள், விவசாயக் கூலித்தொழிலாளர்கள் என அனைத்து தரப்பும் பாதிக்கப்படுவார்கள் என்பதால், மாவட்ட நிர்வாகம் உடனடியாக இப்பிரச்னையில் சுமூக தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிண்ணக்கொரை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**மதிப்பூட்டிய இறைச்சி தயாரிப்பு பயிற்சி**

First Published : 18 May 2011 12:19:01 PM IST

நாமக்கல், மே 17: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், மதிப்பூட்டிய இறைச்சி பொருள்கள் தயாரிப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வரும் செவ்வாய்க்கிழமை (மே 24), மதிப்பூட்டிய இறைச்சி பொருள்கள் தயாரிப்பு குறித்த ஒருநாள் இலவச பயிற்சி நடைபெறுகிறது.

இறைச்சியில் அடங்கியுள்ள பல்வேறு சத்துப் பொருள்கள், இறைச்சியை சுகாதார முறையில் கையாளும் வழிமுறைகள், இறைச்சியில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்களான இறைச்சிக் கட்டி, ஊறுகாய், சூப், இறைச்சி உருண்டைகள் தயாரிப்பது, பேக்கிங் மற்றும் விற்பனைக்கான வழிமுறைகள் செயல்விளக்கத்துடன் கற்றுத்தரப்படுகிறது.

விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் இப் பயிற்சியில் பங்கேற்கலாம். வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ வரும் 23-ம் தேதிக்குள் தொடர்பு கொண்டு தங்களது பெயர்களை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தினமலர்

**கிளாஸ் இந்தியா நிறுவனம்ரூ.18 கோடியில் கிடங்கு வசதி**

மே 19,2011,01:49



சென்னை:ஐரோப்பாவைச் சேர்ந்த, கிளாஸ் குழுமத்தின் ஓர் அங்கமான கிளாஸ் இந்தியா நிறுவனம், 'டெர்ரா டிராக்' என்ற ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகிறது. இந்நிறுவனம், நாட்டின் தென் பகுதியில், அதன் வர்த்தகத்தை அதிகரிக்கும் வகையில், 18 கோடி ரூபாய் மதிப்பில்,பெங்களூரில் அறுவடை இயந்திரங்களை

பாதுகாத்து வைக்கும் வகையில், கிடங்கு வசதியை அமைக்க உள்ளது.இதுகுறித்து கிளாஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் பிரதீப் கே. மாலிக் கூறியதாவது:டில்லியில் உள்ள பரிதாபாத்தில், நிறுவனத்தின் முதல் அறுவடை தயாரிப்பு தொழிற் சாலை, 1991ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இதையடுத்து, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மற்றொரு தொழிற்சாலை, 2008ம் ஆண்டு பஞ்சாபில், ரோப்பர் என்ற இடத்தில் 100 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப் பட்டது. நிறுவனம், இந்தியாவில், கிராப் டைகர் 60, கிராப் டைகர் 30 வீல், கிராப் டைகர் 30 டெர்ரா டிராக் ஆகிய மூன்று வகை இயந்திரங்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

இதுவரையில், 5,000 அறுவடை இயந்திரங்களை விற்பனை செய்துள்ளது.கிராப் டைகர் 60 இயந்திரத்தில், 125 குதிரை திறன் கொண்ட டர்போ இன்ஜின் பொருத்தப்பட்டுள்ளது. கிராப் டைகர் 30 வீல் இயந்திரம், ஒன்பது அடி நீளத்திற்கு வெட்டு கத்தி பொருந்திய ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரமாகும்.இதில், 60 குதிரை திறன் வாய்ந்த இன்ஜின் பொருத் தப்பட்டுள்ளது. கிராப் டைகர் 30 டெர்ரா டிராக் அறுவடை இயந்திரம், நவீன தொழில் நுட்பத்தில் வடிவ மைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்களின் விலை 23.50 லட்சம் ரூபாயில் இருந்து தொடங்குகிறது. இவ்வாறு மாலிக் கூறினார்.

**செயற்கை ரப்பர் பயன்பாடு 8 சதவீதம் வளர்ச்சி**

மே 19,2011,01:50



புதுடில்லி:நடப்பாண்டு பிப்ரவரி மாதத்தில், செயற்கை ரப்பர் பயன்பாடு மற்றும் உற்பத்தி முறையே, 8 சதவீதம் மற்றும் 10 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இம்மாதத்தில், செயற்கை ரப்பர் பயன்பாடு, 33 ஆயிரத்து 925 டன்னாகவும், இதன் உற்பத்தி 9,634 டன்னாகவும் இருந்தது என, ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.கடந்த ஆண்டு, இதே மாதத்தில், செயற்கை ரப்பர் உற்பத்தி, 8,768 டன்னாகவும், இதன் பயன்பாடு 31 ஆயிரத்து 440 டன்னாகவும் இருந்தது. இருப்பினும், நடப்பாண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும் போது, பிப்ரவரி மாதத்தில், இதன் பயன்பாடு 4 சதவீதம் குறைந்துள்ளது. ஜனவரியில், செயற்கை ரப்பர் பயன்பாடு, 35 ஆயிரத்து 260

டன்னாகவும், உற்பத்தி 2.28 சதவீதம் சரிவடைந்து, 9,859 டன்னாகவும் இருந்தது.உள்நாட்டில், டயர் தயாரிப்பு நிறுவனங்கள் அதிகளவில், செயற்கை ரப்பரை பயன்படுத்தி வருகின்றன. சென்ற பிப்ரவரி மாதத்தில், இத்துறை நிறுவனங்களின் செயற்கை ரப்பர் பயன்பாடு,24 ஆயிரத்து 692 டன்னாக இருந்தது.

இது,சென்ற ஆண்டின் இதே மாதத்தில் பயன்படுத்தப்பட்டதை விட, 19 சதவீதம் (20 ஆயிரத்து 738 டன்) அதிகம். சென்ற 2010ம் ஆண்டு ஏப்ரல் முதல், நடப்பாண்டு பிப்ரவரி மாதம் வரையிலுமாக, செயற்கை ரப்பருக்கான தேவைப்பாடு, 20 சதவீதம் அதிகரித்து, அதாவது, 3 லட்சத்து 13 ஆயிரத்து 405 டன் என்ற அளவிலிருந்து, 3 லட்சத்து 75 ஆயிரத்து 805 டன்னாக உயர்ந்திருந்தது.இதே காலத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி 3 சதவீதம் உயர்ந்து, அதா வது, 98 ஆயிரத்து 280 டன்னிலிருந்து, 1 லட்சத்து ஆயிரத்து 97 டன்னாக உயர்ந்துள்ளது.நம் நாடு பிப்ர வரி மாதத்தில், 23 ஆயிரத்து 776 டன் செயற்கை ரப்பரை இறக்குமதி செய்துள்ளது.

இது,சென்ற ஆண்டின் இதே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியை விட, 10 சதவீதம் (21 ஆயிரத்து 607 டன்) அதிகம். பிப்ரவரி இறுதி வரையிலுமாக, 36 ஆயிரத்து 225 டன் செயற்கை ரப்பர் கையிருப்பில் இருந்ததாக, ரப்பர் வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.

**நெல் கொள்முதல் நிலையம் மூடல்**

பதிவு செய்த நாள் : மே 19,2011,03:22 IST

கோபிசெட்டிபாளையம்: கீழ்பவானி பாசனத்தில் நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில், அதிகாரிகளின் அலட்சியப் போக்கால் கோபி நஞ்சகவுண்டன் பாளையத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டது. அதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில் கீழ்பவானி, அரக்கன்கோட்டை, தடப்பள்ளி ஆகிய பாசனக் கால்வாய்கள் மூலம், லட்சக்கணக்கான ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது. நெல்லுக்கு போதிய விலை கிடைக்காததால், அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் துவங்க வேண்டும் என, விவசாயிகள் கோரினர்.

கோரிக்கையின் அடிப்படையில், மாவட்டந்தோறும் அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் துவங்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் 27 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. கோபி சுற்று வட்டாரத்தில் நஞ்சகவுண்டன்பாளையம், புதுவள்ளியம்பாளையம், கூகலூர், காசிபாளையம், அத்தாணி உள்பட பத்துக்கும் மேற்பட்ட கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. கோபியில் நஞ்சகவுண்டன்பாளையம் மற்றும் புதுவள்ளிம்பாளையம் நெல் கொள்முதல் நிலையங்கள் ஒரு மாதமாக மூடப்பட்டுள்ளன. கீழ்பவானி பாசனப்பகுதிகளான சித்தரைபட்டி, புதுக்கரை புதூர், வேட்டைக்காரன் கோவில், குள்ளம்பட்டி, குருமந்தூர், செம்ம்மாண்டிபாளையம்,

பழனிகவுண்டம்பாளையம் உள்ளிட்ட இடங்களில் 1,000 ஏக்கர் நிலத்தில் நெல் அறுவடை பணி துவங்கி, மும்முரமாக நடக்கிறது.

நெல் அறுவடை செய்த விவசாயிகள், நெல் விற்பனை செய்ய கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வருகின்றனர். அவை மூடிக் கிடப்பதால் நெல் மூட்டைகளை திருப்பி எடுத்துச் செல்கின்றனர். விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகள் கூறியதாவது: கீழ்பவானி வாய்க்காலில் சித்திரை பட்டம் நெல் அறுவடை செய்யப்படுகிறது. தனியாரிடம் நெல் விற்றால் மூட்டை 1,800 முதல் 2,000 ரூபாய்க்குள் வாங்குகின்றனர். இந்த விலை எங்களுக்கு கட்டுபடியாகவில்லை. நெல் கொள்முதல் நிலையங்களில் சன்ன ரக நெல் கிலோ 11 ரூபாய், பெருவெட்டு நெல் கிலோ 10.50 ரூபாய் தருகின்றனர். இதனால், விவசாயிகளுக்கு கட்டுப்படியாகிறது.

வறட்சி காலம் என்பதால் நெல் உற்பத்தி குறைவாக இருக்கும். அதாவது, மழைக்காலங்களில் ஏக்கருக்கு 35 மூட்டை வரை கிடைக்கும். தற்போது ஏக்கருக்கு 15 முதல் 25 மூட்டைகள் மட்டுமே கிடைக்கிறது. சாகுபடி செலவு ஏக்கருக்கு 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. தனியாரிடம் நெல் விற்பனை செய்தால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்காது. மூடப்பட்ட நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**"தரம் உயர்ந்தால் விலை உயரும்'**

பதிவு செய்த நாள் : மே 19,2011,02:29 IST

பந்தலூர்: கூடலூர் அருகே மரப்பாலம் பகுதியில் உள்ள "டீ மியூசியத்தை' தேயிலை வாரிய செயல் இயக்குனர் திறந்து வைத்தார். கூடலூர் அருகே மரப்பாலம் "வுட் பிரிட்ஜ்' தேயிலை தொழிற்சாலையில் டீ மியூசியம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா தொழிற்சாலை வளாகத்தில் நடந்தது. மேலாளர் ஈஸ்வரன் வரவேற்றார்.
தேயிலை வாரிய உறுப்பினர் வக்கீல் கோஷிபேபி இதன் சிறப்பு பற்றி பேசினார்.உபாசி கே.வி.கே. விஞ்ஞானி ராமமூர்த்தி பேசுகையில், ""தரமான தேயிலை தூள் தயாரிக்க வேண்டுமானால் தரமான தேயிலை கொள்முதல் செய்ய வேண்டும். அதற்கு தங்களிடமுள்ள தேயிலை தோட்டத்தை நான்கு பாகங்களாக பிரித்து ஒவ்வொரு ஆண்டும் கவாத்து செய்திட முன்வரவேண்டும்.

கவாத்து வெட்டுவதில் திறமையுள்ள நபர்கள் இருந்தால் அவர்களுக்கு மானிய விலையில் கவாத்து மெஷின் வழங்கப்படும். மேலும் வுட் பிரிட்ஸ் தேயிலை தொழிற்சாலையில் துவக்கப்பட்டுள்ள கிரீன் தேயிலையை ஆய்வு மையத்தில் வைத்து ஆய்வு செய்த போது முதல் தரமான தேயிலை தூள் என சான்றளிக்கப்பட்டுள்ளது. இதே நிலை தொடர விவசாயிகள் குறித்த காலத்தில் பசுந்தேயிலையை பறிக்க வேண்டும்,'' என்றார்.

சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்க நிர்வாகி ஷாஜி பேசுகையில், ""பசுந்தேயிலைக்கு விலை கிடைக்காத நிலையில் சாலையில் இறங்கி போராடிய காலம் மாறி, தற்போது தேயிலை தோட்டத்தில் நல்ல நிலையில் பணியாற்றுவதன் மூலம் தரமான பசுந்தேயிலை கொடுத்து நிறைவான விலையை பெற முடிகிறது. விலை கிடைக்கவில்லை என்று கூறிவருவதை விட விலை கிடைக்க என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்து செயலாற்றிட விவசாயிகள் முன்வரவேண்டும்," என்றார்."டீ மியூசியத்தையும், கிரீன் டீ' தொழிற்சாலை வளாகத்தையும் திறந்து வைத்து தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசுகையில், ""தேயிலை விவசாயிகளும், தொழிற்சாலை நிர்வாகத்தினரும் ஒருவருக்கொருவர் பகைவர்கள் போல நடந்து கொண்ட நிலை மாறி தற்போது தொழிற்சாலை வளர்ச்சியில் விவசாயிகளும், விவசாயிகளுக்கு பயன் கிடைக்கும் வகையில் தொழிற்சாலை நிர்வாகங்களும் செயல்பட்டு வருகிறது.

தேயிலை தூளில் கலப்படத்தை முழுமையாக கட்டுப்படுத்த இயலாத நிலையில் தேயிலை விவசாயிகள் தரமான தேயிலையை கொள்முதல் செய்து அதன் மூலம் நிறைவான பலனை அடைய இயலும். மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தேயிலை தூள் விற்பனை செய்ய தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது," என்றார்.தொழிற்சாலை நிர்வாக இயக்குனர் துரைராஜ் பேசுகையில்,""தேயிலை தொழிற்சாலை என்பது பெயரளவிற்கு நடத்தாமல் விவசாயிகளுக்கு பயன்தரும் வகையில் செயல்படுத்திட வேண்டும் எனும் நோக்கில் கிரீன் டீ உற்பத்தி துவக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிலோ பசுந்தேயிலைக்கு 25 ரூபாய் வரை விலையாக வழங்கிட இயலும்.

இதன் உற்பத்தி தரம் மேலும் உயரும்போது விலையும் உயரும். எனவே, விவசாயிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பசுந்தேயிலை இலையை தொழிற்சாலைக்கு தந்து தங்களின் பங்களிப்பை வழங்கிட முன்வரவேண்டும்," என்றார்.தொடர்ந்து தேயிலை தூள் விற்பனை மையத்தை உறுப்பினர் கோஷிபேபி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் குன்னூர் கனரா வங்கி மேலாளர் பழனியப்பன், உபாசி ஆலோசகர் சங்கரநாராயணன் மற்றும் பணியாளர்கள், சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**அறுவடை செய்த தேங்காய், எள்ளை உடனே விற்பனை செய்யுங்கள்**

பதிவு செய்த நாள் : மே 19,2011,02:51 IST

திருநெல்வேலி : அறுவடை செய்த எள் மற்றும் தேங்காயை விவசாயிகள் உடனடியாக விற்பனை செய்து பயன் பெறுமாறு நெல்லை வேளாண்மை துணை இயக்குநர் தியாகராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது; தை பட்டத்தில் விதைத்த எள், அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து வைப்பதா என்ற சந்தேகம் விவசாயிகளிடையே எழுந்தது. இது குறித்து வேளாண் பல்கலைக்கழகத்தின் உள் நாட்டு மற்றும் ஏற்றுமதிசந்தை

தகவல் மையம் ஆய்வு மேற்கொண்டு, மே,ஜூனில் சிவப்பு எள் விலை கிலோவிற்கு 44 முதல் 49 ரூபாய் வரை இருக்கும் என தெரிவித்துள்ளது. எனவே, எள்ளின் விலை இனி உயர்வதற்கு வாய்ப்பில்லை என்பதால் விவசயிகள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்று பயனடையலாம்.

தேங்காய் அதுபோல் தேங்காயை விற்பனை செய்ய ஏற்ற சரியான முடிவுகளை விவசாயிகள் எடுக்கும் வகையில், வேளாண் பல்கலையில் உள்ள உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி மந்தை தகவல் மையம் ஆய்வு செய்து மே, ஜூன் மாதங்களில் ஒரு தேங்காயின் விலை 10 முதல் 12 ரூபாய் வரை இருக்கும் என தெரிவித்துள்ளது. எனவே தேங்காய் விலை ஏற்றம் பெற குறைந்த வாய்ப்புகளே உள்ளதால் விவசாயிகள் அறுவடை செய்த தேங்காய்களை விவசாயிகள் இருப்பு வைக்காமல் உடனே விற்பனை செய்து பயன் பெறலாம். இத்தகவலை நெல்லை வேளாண்மை இணை இயக்குநர்(வேளாண் வணிகம்) தியாகராஜன் அறிக்கையில் கூறியுள்ளார்.

தினத்தந்தி

## *நவம்பர் – ஏப்ரல் மாத காலத்தில் நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 16% குறைந்தது*



*பார்கவ் திரிவேதி*

*அகமதாபாத்*

*நடப்பு 2010–11 எண்ணெய் பருவத்தில் (நவம்பர் – அக்டோபர்) முதல் ஆறு மாதங்களில் தாவர எண்ணெய் (சமையல் + இதர எண்ணெய்) இறக்குமதி 16 சதவீதம் குறைந்துள்ளது. முதன் முறையாக இதன் இறக்குமதி சரிவடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. உள்நாட்டில் உற்பத்தி அதிகரித்து வருவதே இதற்கு காரணமாகும்.*

கடந்த பருவத்தில்...

கடந்த 2009–10 பருவத்தின் முதல் ஆறு மாதங்களில் தாவர எண்ணெய் இறக்குமதி 42.90 லட்சம் டன்னாக இருந்தது. இது, நடப்பு பருவத்தின் இதே காலத்தில் 36.03 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.

நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 12.5 சதவீதம் குறைந்து, 5.43 லட்சம் டன்னிலிருந்து 4.75 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இதில், சமையல் எண்ணெய் 4.58 லட்சம் டன்னாகும். மொத்த தாவர எண்ணெய் இறக்குமதியில் இது 96 சதவீதமாகும். இதர எண்ணெய் வகைகள் இறக்குமதி 17,004 டன்னாக உள்ளது. இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள்

உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரித்து வருகிறது. எனவே, சமையல் எண்ணெய் அளிப்பு அதிகரித்து வருவதையடுத்து, இறக்குமதி குறைந்துள்ளது.

இனிவரும் மாதங்களில் இது மேலும் குறையும் என்று இச்சங்கத்தின் தலைவர் சுசில் கோயெங்கா தெரிவித்தார்.

புண்ணாக்கிற்கான தேவைப்பாடு அதிகரித்து வருவதாலும், ஆலைகள் எண்ணெய் வித்துக்களை அதிக அளவில் அரவை செய்துள்ளன. நடப்பு பருவத்தில் இதுவரையில், உள்நாட்டில் உற்பத்தியான எண்ணெய் வித்துக்களில் 70 சதவீதம் அரைக்கப்பட்டுள்ளது. சென்ற பருவத்தில் இது 50 சதவீதமாக இருந்தது. இதுபோன்ற காரணங்களால், சமையல் எண்ணெய்க்காக வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை சற்று குறைந்துள்ளது.

எண்ணெய் உற்பத்தி அதிகரிப்பதால், உணவு பொருள் பணவீக்கம் குறைய வாய்ப்புள்ளது. இது, மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் ஆறுதல் தரக்கூடிய செய்தியாகும்.

தனிநபர் பயன்பாடு

கடந்த 10 ஆண்டுகளாக எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி மந்தமாக இருந்துள்ளது. இதனையடுத்து, இந்தியா அதன் சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. கடந்த 2000–01–ஆம் பருவத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 50.90 லட்சம் டன்னாக இருந்தது. இது, 2009–10–ஆம் பருவத்தில் இரண்டு மடங்கு அதிகரித்து 92.40 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இந்நிலையில், உள்நாட்டில் சமையல் எண்ணெய் பயன்பாடு அதிகரித்து வருகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தனிநபர் எண்ணெய் பயன்பாடு 9 கிலோவாக இருந்தது. இது, தற்போது 13.5 கிலோவாக உயர்ந்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, சமையல் எண்ணெய் தேவைப்பாடு ஆண்டுக்கு சராசரியாக 6–8 லட்சம் டன் என்ற அளவில் அதிகரித்து வருகிறது.

தேவைப்பாடு

இந்தியாவில் ஆண்டுக்கு சராசரியாக 155–160 லட்சம் டன் சமையல் எண்ணெய் தேவைப்படுகிறது. அதேசமயம், உற்பத்தி சுமார் 70 லட்சம் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, நடப்பு 2010–11–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் 85 லட்சம் டன் சமையல் எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயல் இயக்குனர் பீ.வி.மேத்தா தெரிவித்துள்ளார். இது, சென்ற பருவத்தில் 92.40 லட்சம் டன்னாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது நடப்பு பருவத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி 8 சதவீதம் குறையும்.

மதிப்பீடு

சென்ற 2009–10–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 2.30–2.40 கோடி டன்னாக இருந்தது. இது, நடப்பு பருவத்தில் 3 கோடி டன்னாக உயரும் வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது.

## சர்வதேச அளவில் காபி ஏற்றுமதி 7 சதவீதம் உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சர்வதேச அளவில் காபி ஏற்றுமதி, கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் 7 சதவீதம் உயர்ந்து 10.10 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டில் 9.40 கோடி மூட்டைகளாக இருந்தது. ஆக, காபி ஏற்றுமதி 7 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளது. (ஒரு மூட்டை என்பது 60 கிலோ காபி கொட்டைகளை கொண்டதாகும்). உலக அளவில் காபி பயன்பாடு அதிகரித்து வருவதே ஏற்றுமதி உயர்ந்ததற்கு முக்கிய காரணம் என சர்வதேச காபி அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் காபியில் 80 சதவீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 3.25 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டை விட 60 சதவீதம் அதிகமாகும். அளவின் அடிப்படையில் சென்ற நிதி ஆண்டில்தான் காபி ஏற்றுமதி முதல் முறையாக இந்த அளவிற்கு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வேளாண்மை செய்திகள்

## சிப்பிக்காளான் பூச்சி, நோய் நிர்வாக முறைகள்



தமிழகத்தில் சிப்பிக்காளான் பற்றிய விழிப்புணர்வு மற்றும் சாகுபடி மக்களிடம் பிரபலமாகி வருகிறது. இந்த காளானில் அதிக புரதச்சத்து, குறைந்த அளவு கார்போஹைரேட் உள்ளதால் மக்களிடையே ஆரோக்கிய உணவாக வரவேற்பை பெற்று உள்ளது.

### குடிலின் வெப்ப நிலை

இந்த சூழலில் தரமான காளான்களை அறுவடை செய்யவும், அதிக விளைச்சல் பெறவும், காளான் குடிலின் வெப்ப நிலையை குறைத்து ஈரப்பதத்தை அதிகப்படுத்தினால் சிப்பிக் காளானின் விளைச்சல் அதிகரிக்கும். இதற்கு ஏற்ற ஈரப்பதத்தை அளிக்கும் போது குடில் மற்றும் படுக்கையில் பல்வேறு நோய்க் கிருமிகளும், பூச்சிகளும் தோன்றி வளர்ச்சியை தடுத்து விளைச்சலை கணிசமாக பாதிக்கிறது.

இந்த காளான் படுக்கையில் பச்சை பூசணம், பாக்டீரியா அழுகல் நோய் ஆகியவை அதிக ஈரப்பதத்தின் காரணமாக தோன்றுகிறது. இதனால் விளைச்சல் 75 சதவீத அளவு பாதிப்பு அடைகிறது. மேலும் இந்த படுக்கையில் போரிட் ஈ, சியாரிட் ஈ ஸ்பிரிங்டெயில் போன்ற பூச்சிகள் தோன்றி முட்டைகள் இடுகின்றன. இதிலிருந்து புழுக்கள் தோன்றி காளான் களைகளை தாக்குகின்றன. மேலும் தாக்கப்பட்ட படுக்கையில் இருந்து இந்த நோய்கள் மற்ற படுக்கைகளுக்கும் பரவி சேதத்தை அதிகமாக்குகின்றன. இவற்றை கட்டுபடுத்தி, நல்ல விளைச்சலை அதிகரிக்க பூச்சி மற்றும் நோய் நிர்வாக முறைகளை கடைப்பிடிப்பது அவசியம் ஆகும்.

### பூச்சி நோய் தாக்காத வைக்கோல்

இதற்காக பூச்சி நோய் தாக்காத வைக்கோலை பயன்படுத்த வேண்டும். ஊற வைத்த பின் தொற்று நீக்கம் செய்யப்பட்ட வைக்கோல்களை கொண்டு படுக்கைகள் தயார் செய்ய வேண்டும். அதன் ஈரப்பதம் 60 முதல் 65 சதவீத அளவுக்கு மேல் இருக்க கூடாது. இதை விட ஈரப்பதம் அதிகமானால் பாக்டீரியா அழுகல் நோய் ஏற்பட்டு காளான் நிறம் மஞ்சளாக மாறும். நாளடைவில் முற்றிலும் அழுகிப்போய் துர்நாற்றத்துடன் காணப்படும்.

இதை தவிர இதர களை பூசணங்களும் காளான் படுக்கையில் தோன்ற வாய்ப்பு உள்ளது. எனவே காளான் படுக்கையை தயாரிக்க பயன்படுத்தும் போது வைக்கோலின் ஈரப்பதம் முக்கியமானதாகும். இதை உலரவைக்கும் போது மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். இதன் மூலம் வைக்கோலில் ஈக்கள் வந்து முட்டையிடுவதை தவிர்க்க முடியும்.

### சிறிய நீர் தெளிப்பான்

இதே போல் குடிலில் உள்ள சன்னல், கதவுகளுக்கு நைலான் வலைகளை பொருத்த வேண்டும். இதன் மூலம் ஈக்கள், வண்டுகள் காளான் குடிலுக்குள் வருவது தவிர்க்கப்படும். இந்த படுக்கைகளில் உள்ள ஈரப்பதத்தை காக்க காலை, மாலை வேளைகளில் நீர் தெளிக்கும் போது படுக்கையில் நீர் தேங்கினால் காளான் அழுகி விடும். இதற்கு சிறிய நீர் தெளிபான்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். நல்ல தரமான பூசண நோய் தாக்காத காளான் வித்துகளை மட்டுமே படுக்கைகள் தயார் செய்யும் போது பயன்படுத்த வேண்டும். பாக்டீரியா அழுகல் நோயை தடுக்க பிளீச்சிங் பவுடரை 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற விதத்தில் கலந்து படுக்கை மீது தெளிக்க வேண்டும். களை பூசணங்கள் தோன்றிய காளான்களை குடிலில் இருந்து உடனடியாக அகற்றி அழித்து விட வேண்டும். காளான் குடில் அருகில் குப்பை குழிகள் அமைப்பதை தவிர்க்க வேண்டும்.

### தொற்று நீக்கம்

மேலும் களை பூசணம், பாக்டீரியா அழுகல் நோய், ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட காளான் படுக்கைகளை குடிலுக்கு வெளியே பெரிய குழி தோண்டி புதைத்து விட வேண்டும். இதன் மேற்பகுதியில் எண்டோசல்பான் மருந்தை லிட்டருக்கு 1 மில்லி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். காளான் குடில்களில் அறுவடை முடிந்த 45 நாட்களுக்கு பிறகு தொற்று நீக்கம் செய்ய வேண்டும். இதற்கு பார்மலின், பொட்டாசியம் பர்மாங்கனேட் மருந்துகளை 2:1 என்ற விகிதத்தில் கலந்து பயன்படுத்த வேண்டும். இந்த மருந்துகளை கலந்து குடில்களில் வைத்தபின் 2 நாட்களுக்கு குடிலைத் திறக்கவோ உள்ளே செல்லவோ கூடாது. குடிலின் சன்னல்கள் நன்றாக மூடப்பட்டு இருக்க வேண்டும். இவ்வாறு ஒருங்கிணைந்த முறைகளை கடைப்பிடிபபதன் மூலம் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை தவிர்த்து தரமான சிப்பிக்காளான் பெறமுடியும்.

தகவல்:- பேராசிரியர்கள் கோபாலகிருஷ்ணன், வள்ளுவப்பாரிதாசன், பிரகாசம், பயிர் நோயியல் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை.

---

ஆடுகளை தாக்கும்

## குடல்புழு நோயை நீக்க மருந்தாக பயன்படும் 'சோற்றுக்கற்றாழை'

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் செம்மறி ஆடு வளர்ப்பு மக்களுடைய வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் தொழிலாக விளங்கி வருகிறது. குறிப்பாக வளர்க்கப்படும் செம்மறி ஆடுகளில் மேச்சேரி இனம் அதிகமாக வளர்க்கப்படுகிறது. இவை இறைச்சிக்காக அதிக அளவில் வளர்க்கப்படுகிறது.

### ஒட்டுண்ணி பிரச்சினை

இந்த செம்மறி ஆடுகளை சிறிய கொட்கையில் வைத்து பராமரித்து வருகின்றனர். பெரும்பாலும் காடு மற்றும் வயல்வெளியில் மேய்ச்சல் மூலம் ஆடுகளுக்கு தேவையான உணவுகளை அளித்து வருகின்றனர். இதன் மூலம் தீவனச் செலவு குறைந்து வருகிறது. இருந்த போதிலும் மேய்ச்சலுக்காக செல்லும் ஆடுகளுக்கு உள் ஒட்டுண்ணி பிரச்சினை அதிக அளவில் வர வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக குடல்புழு நோய் ஆடுகளை அதிக அளவில் தாக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது.

இந்த நோய்க்கு ரசாயன குடற்புழு நீக்க மருந்துகளான ஆல்பெண்ட்சோல், பெனாகர் ஆகியவற்றை கொடுக்கின்றனர். இருந்தாலும் இவை குடல்புழு நோயை குணப்படுத்துவதில்லை.

### மூலிகை சாறு

ஆனால் இயற்கையில் கிடைக்கும் வேப்பங்கொட்டையை இடித்து அதில் இருந்து கிடைக்கும் சாற்றை வேப்ப எண்ணெய், மூலிகைச்சாறு மற்றும் சோற்றுக் கற்றாழை ஆகியவற்றுடன் கலந்து கொடுக்கும் போது உள் ஒட்டுண்ணிகள் பிரச்சினை வெகுவாக குறைந்து வருகிறது. இந்த நோயை குணப்படுத்தும் விதத்தில் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் ஆல்பெண்சோல் 7 மில்லி கிராம், வேப்ப எண்ணெய் 50 மில்லி, வேப்பங்கொட்டை 20 கிராம், பாவக்காய் 20 கிராம், பூண்டு 50 கிராம், வாழைத்தண்டு 50 கிராம், ஆகியவற்றை ஒன்றாக கலக்கி அவற்றில் இருந்து சாறு எடுத்து வெல்லத்துடன் கலந்து கொடுக்கப்பட்டது.

இதே போல் தனியாக ஒரு ஆட்டுக்கு 75 கிராம் அளவு கொண்ட சோற்றுக்கற்றாழையுடன் 10 கிராம் வெல்லம் கலந்து கலவை கொடுக்கப்பட்டது. இதற்காக ஒவ்வொரு பரிசோதனைக்கும் 10 ஆடுகள் விதம் 40 ஆடுகள் தேர்வு செய்யப்பட்டது. இந்த மருந்தை கொடுப்பதற்கு 1 மாதத்துக்கு முன்பும், அதன் பிறகும் ஆட்டின் எடை கணக்கிடப்பட்டது. இதே போல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஆடுகளின் புழுக்கை முறையே 7,14,28 நாட்களில் பரிசோதனை செய்யப்பட்டது.

### சிறு துண்டுகளாக

நன்கு வளர்ந்த ஆரோக்கியமான சோற்றுக்கற்றாழை செடியை தேர்வு செய்ய வேண்டும். இதன் மடலை வெட்டி எடுத்து சுத்தமான தண்ணீர் கொண்டு கழுவ வேண்டும். அதன் பின்பு மடலில் உள்ள மேல் தோல், ஓரத்தில் உள்ள முட்களையும் நீக்க வேண்டும். பின்னர் அவற்றை சிறுசிறு துண்டுகளாக வெட்ட வேண்டும். இந்த துண்டுகளை ஒரு சிறு பாத்திரத்தில் போட்டு நாட்டுச் சர்க்கரையுடன் நன்கு கலக்கி வாய்வழியாக கொடுக்க வேண்டும். இவ்வாறு 3 மாதங்களுக்கு ஒரு முறை ஆடுகள் அனைத்தும் மேய்ச்சலுக்கு செல்லும் முன்பு கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுக்கும் பட்சத்தில் ஆடுகளில் உள்ள குடற்புழுக்கள் அனைத்தும் இறந்து விடும்.

சோற்றுக் கற்றாழை நமது பகுதிகளில் எளிதில் கிடைக்க கூடியதாகவும். மேலும் பயன்படுத்துவதற்கு எளிமையானதாக உள்ளது. மிகக்குறைந்த அளவே செலவு ஆவதால் ஆடுகளின் ஆரோக்கியத்துக்கு பல்வேறு வகைகளில் உதவுகிறது. ஆடு வளர்ப்போர் இந்த தொழில் நுட்பத்தை நன்கு பயன்படுத்தி வருகின்றனர்.

தகவல்:- ஆர்.ஜி.ரீனா, விலங்கியல் துறை நிபுணர், தாராபுரம்.

---

## காய்கறி பயிர்களில் நல்ல மகசூலுக்கு சிக்கன நீர்ப்பாசனம்

தற்போது கடுமையான கோடையில் தண்ணீரின் தேவை உயர்ந்து வருகிறது. நீரை தகுந்த அளவான அளவில் பயிர்களுக்கு பாய்ச்சும் போது மகசூலும் அதிக அளவில் கிடைக்கிறது. அதிக அளவிலான பயிர்களுக்கும் இருக்கும் நீரை சரியாக பகிர்ந்தளிக்க முடியும். இத்துடன், சரியான அளவான நீர்நிர்வாகத்தால் காய்கறிகளில் பூச்சிநோய்களின் தாக்குதல் மற்றும் களைகள் கட்டுப்படுத்தப்படுவதும் தெரியவந்துள்ளது. எனவே காய்கறி பயிர்களில் மண்ணின் தன்மைக்கேற்ப நல்ல வடிகால் வசதியுடைய நிலத்தின் பயிர்களின் தேவைக்கேற்றவாறு சரியான அளவில் காலம் தவறாமல் நீர்ப்பாசனம் செய்வது அவசியம் ஆகும்.

இதற்கு எந்த மாதிரியான சூழ்நிலையில் நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொள்வது முக்கியம்.

பயிர் சாகுபடி இடைவெளி, மண்ணை பயன்படுத்தும் முறைகள், மண் வகைகள்,

பயிர்சாகுபடி முறைகள், மழையளவு, அந்த பகுதியில் நீர் ஆவியாகும் தன்மை, தண்ணீர் பெறும் முறைகள், தண்ணீர் பாய்ச்சும் அளவு, தண்ணீர் பாய்ச்சுவதற்கு ஆகும் செலவு, மண்ணின் கார அமிலத்தன்மை, பயிர்சாகுபடி செய்யும் பரப்பு, தண்ணீர் பாய்ச்சும் செலவு, மண்ணின் தன்மைகள், நீர் விரைவாக பாய்ச்சு தன்மைகள் ஆகிய காரணிகளை வைத்து நீர்ப்பாசன காலகட்டத்தை தேர்வு செய்யலாம்.

105 நாட்கள் வயதுடைய ஒரு காய்கறி பயிரின் வாழ்க்கை பருவத்தை, முளைக்கும் பருவம் (20 நாட்கள்), வளர்ச்சி பருவம்(30 நாட்கள்), பூ மற்றும் காய்ப்பருவம்( 40நாட்கள்), முதிர்ச்சிப் பருவம்( 15 நாட்கள்) என்று பிரிக்கலாம். இதில் முதல் 20நாட்களும், கடைசி 15 நாட்களும் அதிகமாக நீர்ப்பாய்ச்ச தேவையில்லை. ஆனால் வளர்ச்சிப்பருவத்திலும், பூ மற்றும் காயாகும் பருவத்திலும் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கக் கூடாது. இந்த காலகட்டத்தில் பயிருக்கு போதிய சரியான அளவு தண்ணீர் அளித்தால் மட்டுமே நல்ல மகசூலை எட்ட முடியும்.

தகவல்: பி.எஸ்.காதிரி, வேளாண்மை துணை இயக்குநர், நீர்மேலாண்மை பயிற்சி நிலையம், விநாயகபுரம்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,740–2,760

### மணிலா பயறு

80 கிலோ கொண்ட மூட்டை
3,875–3,910

### கடலை எண்ணெய்

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
8,675–00

### கடலை புண்ணாக்கு

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450–00

### தேங்காய் எண்ணெய்

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,917–00

### நல்லெண்ணெய்

குமாரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 12,300–00
டின் (15கிலோ) 1,700–00

### விளக்கெண்ணெய்

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
10,800.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850–00

### சூரியகாந்தி எண்ணெய்

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,155.00

### ரீபைண்டு ஆயில்

(சுத்திகரிக்கப்பட்டஎண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,475.00

### வனஸ்பதி

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,105.00

### பாமாயில்

10 கிலோ டின் (வரி தனி) 575–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மே.18–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மே.18–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 7,422
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 12,591
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 11,248
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 12,654
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,316
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 13,357
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 20,246

## கோவை உழவர் சந்தை

கோவை,மே.18–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | | | (கிலோவுக்கு) | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 80–00 | காலிப்பிளவர் | ரூ. | 28–30 |
| கத்தரிக்காய் | ரூ. | 10–12 | பொறியல் தட்டை | ரூ. | 11–12 |
| வெண்டைக்காய் | ரூ. | 15–17 | பச்சை மொச்சை | ரூ. | 30–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 7–9 | தேங்காய் | ரூ. | 12–14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 9–11 | பட்டாணி | ரூ. | 80–60 |
| புடலை | ரூ. | 8–10 | பூண்டு | ரூ. | 90–100 |
| பீர்க்கான்காய் | ரூ. | 8–12 | கறிவேப்பிலை | ரூ. | 14–15 |
| சுரைக்காய் | ரூ. | 10–12 | அகத்தி | ரூ. | 16–00 |
| பாகற்காய் | ரூ. | 20–22 | வாழைக்காய் | ரூ. | 16–00 |
| கொத்தவரை | ரூ. | 13–00 | குடைமிளகாய் | ரூ. | 36–00 |
| பூசணிக்காய் | ரூ. | 8–10 | சாதா பீன்ஸ் | ரூ. | 20–22 |
| அரசாணிக்காய் | ரூ. | 6–7 | டபுள்பீன்ஸ் | ரூ. | 24–00 |
| மேராக்காய் | ரூ. | 16–18 | கறிபீன்ஸ் | ரூ. | 32–34 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12–14 | புஸ்பீன்ஸ் | ரூ. | 32–34 |
| குண்டு மிளகாய் | ரூ. | 22–00 | காளான் | ரூ. | 80–140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 8–22 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–14 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10–11 | மாங்காய் | ரூ. | 8–10 |
| இஞ்சி | ரூ. | 32–00 | திராட்சை | ரூ. | 32–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 26–28 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16–00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 16–20 | கொய்யா1கிலோ | ரூ. | 26–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 24–00 | மாதுளை1கிலோ | ரூ. | 60–120 |
| கருணைகிழங்கு | ரூ. | 26–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–14 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 80–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | மாம்பழம் | ரூ. | 15–20 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | ஆப்பிள் | ரூ. | 130–135 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | சாத்துக்குடி | ரூ. | 15–00 |
| முள்ளங்கி | ரூ. | 10–12 | நெல்லிக்காய் | ரூ. | 44–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 18–20 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 9–10 | வெள்ளரி | ரூ. | 10–26 |
| நூல்கோல் | ரூ. | 20–00 | புளி 1 கிலோ | ரூ. | 75–00 |
| கொத்தமல்லி | ரூ. | 30–36 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36–00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20–00 | அவரை | ரூ. | 28–30 |
| முட்டைகோஸ் | ரூ. | 8–10 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| கலர்கோஸ் | ரூ. | 14–00 | மக்காச்சோளம் | ரூ. | 8–00 |
| புதினா | ரூ. | 16–00 | தர்பூசணி | ரூ. | 9–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.26400 |
| மிளகு (சேட்டன்) | ரூ.27200 |
| மிளகு (வயநாடன்) | ரூ.28200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 15,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10500 |
| சுக்கு(புதியது) | ரூ.10000 |
| சுக்கு(பழையது) | ரூ.16100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1500 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10400 |
| கொப்பரை நாடன் | ரூ.8375 |
| கொப்பரை ராசு | ரூ.7075 |
| கொப்பரை தில்பசன் | ரூ.7025 |
| கொப்பரை ராஜிபூ | ரூ.8100 |
| உருண்டை கொப்பரை | ரூ. 8300 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22650 |
| ரப்பர் பால் | ரூ. 16760 |
| காப்பி | ரூ. 9100 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 6800 |
| நேந்திரகாய் | ரூ. 1600 |
| இஞ்சி | ரூ. 1050 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,மே.18–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் கணபதி பிராண்ட் | ரூ.1,520 | 98.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1120 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 75 |
| பருத்தி விதை எண்ணை ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1010 | (–) |
| அரிசி தவிடு எண்ணை பூர்ணாபிராண்டு | ரூ.1120 | 71.00 |
| நல்லெண்ணை காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1620 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் ருசிபிராண்டு | ரூ. 1,035 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,380 | 90.00 |
| வனஸ்பதி வில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,030 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,030 | – |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.223.00 | அதிகபட்சவிலை | ரூ.263.00 |
| சராசரி விலை | ரூ.163.02 | சராசரி விலை | ரூ.248.29 |
| குறைந்தபட்சவிலை | ரூ.146.00 | குறைந்தபட்சவிலை | ரூ.235.00 |

**பட்டு நூல் ரூ.1,865**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,376.00 | 16,376.00 | 16440.00 |
| ஒரு கிராம் | 2,047.00 | 2,047.00 | 2055.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 52,965.00 | 56,600.00 | 56,500.00 |
| ஒரு கிராம் | 56.65 | 56.60 | 56.50 |

தினகரன்

# ஒரு எலுமிச்சை பழம் ரூ.5

பதிவு செய்த நாள் 5/19/2011 1:29:17 AM



புளியங்குடி : புளியங்குடி மார்க்கெட்டில் எலுமிச்சை விலை உயர்ந்துள்ளது. ஒரு பழம் ரூ.5 ஆக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் எலுமிச்சை உற்பத்தியிலும், விற்பனையிலும் நெல்லை மாவட்டம் புளியங்குடி முதலிடம் வகிக்கிறது. புளியங்குடி & டி.என்.புதுக்குடியில் தனியார் வணிக வளாகத்தில் 29 கடைகளில் ஏலம் மூலம் எலுமிச்சை விற்பனை நடந்து வருகிறது.

ஆண்டு முழுவதும் எலுமிச்சை விளைச்சல் இருந்தாலும் கோடை காலத்தில்தான் எலுமிச்சை பழத்திற்கு அதிக மவுசு இருக்கும். சாதாரண காலங்களில் ஆயிரம் பழங்கள் ரூ.500 முதல் ரூ.800 வரை ஏலம் மூலம் விற்பனையாகும் நிலையில் கோடை காலத்தில் தான் 3 ஆயிரம் ரூபாய் வரை மார்க்கெட்டில் விற்பனையாகும். கடந்த மாதம் கோடை வெயில் தாக்கத்தால் முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டு ஆயிரம் பழங்கள் ரூ.3,800 வரை விற்பனையானது. இதற்கிடையில் கடந்த ஏப்ரல் மாதம் தமிழகம் மற்றும் கேரளாவில் கோடை மழை பெய்ததால் எலுமிச்சை விலை சரிந்தது.

இந்நிலையில் கடந்த 5ம் தேதி முதல் கத்திரி வெயில் தமிழகம், கேரளா மற்றும் அண்டை மாநிலங்களில் வாட்டி வதைப்பதால் கரும்புசாறு, லெமன் ஜூஸ் வியாபாரம் படு ஜோராக நடக்கிறது. இதனால் புளியங்குடி எலுமிச்சைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டதால் விலை உயர்வு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் புளியங்குடி எலுமிச்சை மார்க்கெட்டில் முதல்தரம் கொண்ட ஆயிரம் பழங்கள் ரூ.4,200 முதல் ரூ.4,600 வரை ஏலம் போனது. ஒரு பழம் ரூ.5 ஆக விலை உயர்வானது. இவ்விலை உயர்வானது எந்த ஆண்டிலும் இல்லாததாகும். 2ம் தர பழங்கள் ரூ.2,500 முதல் ரூ.3,500 வரையிலும், பச்சை காய்கள் ரூ.500 முதல் ரூ. 800 வரையிலும் விற்பனையாகி வருகிறது.